# ஆதி மார்க்க னீதி மொழி

**March 2025**

**இதழ் 44 – மார்ச் மாதம் 2025 வெளியீடு**
**© AMNA Trust, Chennai**



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai March 2025

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர் பாதத்துடன் ஆதி மார்க்க னீதிமொழி மின்னணு சஞ்சிகை 44 ஆம் இதழாக பிப்ரவரி மாதத்தின் வியாழன் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற 12 அவை மற்றும் 3 இசை வகுப்பு நிகழ்வுடன் உதயமாகி உங்கள் கைகளில் தவழ்கிறது.

மூல மந்திரம், பாதபூஜை, மகா சங்கல்ப மந்திரம் இவற்றின் அடி நாதமான பிறவா நெறியை பிரம்மவித்தை செயல் மூலம் பழகச் செய்து சாவாவரம் அருள்பவர்களே குருகுலா அதிபர்கள். உள்ளத்தில் உயிரின் இலட்சணமும் முத்தி நெறிக்கான உத்தியும் அறியாத மூர்க்கனாகிய நரனை மனுவாக மாற்றி சித்தமலம் அறுத்து தேவனாக்கும் தெள்ளமுதமே ஆசானின் தேவத் திருவாக்கு. அதனுடன் இரண்டறக் கலந்து அகம் சார்ந்த வாழ்க்கை வாழ்வதற்கான வழி காட்ட வந்ததுவே இந்த சஞ்சிகை.

இதனைப் பார்த்து தொடர்கின்ற மக்களும் நித்தியமான வாழ்வு வாழ்வதற்கான தெளிந்த அறிவைப் பெற்று வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வருவதுவே இந்த மின்னணு சஞ்சிகை. ஜாதி மனுக்குலம் அனைத்தும் ஜீவன் கண்ட ஜென்மசாபல்ய குலமாகி வாழ்வாங்கு வாழ்வு வாழ்ந்திட எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai 

*அழிவில்லாத முடிவில்லாத அழகு ஆண்மையோடு, னோய் னொடியே இல்லாத னித்திய உடல் எடுத்து வாழவந்ந மனிதன் இவன். இறைவனோ உடலில்லாதவன். அந்ந இறைவன் தன் வல்லபத்துக்கேற்ற எழிலான தோற்றத்தோடு வெளியாவதற்கு இருக்கின்ற அந்நப் பொன்னுலகத்தில் வாழும் யுகவித்தாக ஆக வந்நவன். அறிவு மாணிக்கத்தை இவனுக்குத் தந்நதும் வேதங்ஙளாகிய அறிவிப்புகள் அனந்நம் தந்நதும் இதற்குத்தான். இவற்றை எல்லாம் அறிவித்து, இவனை எப்படியும் அதோகதிக்குப் போகாமல் திருப்பி, னித்தியத்தில் ஆக்கவே னாம் வந்நோம். இந்ந வசந்நத்தைக் கைனழுவ விட்டுப் போகிறவனை, அவன் போகிற எல்லையை எடுத்துச் சொல்லி, கடைசியாகக் கட்டி அழுது விடுவோம் என்று னினைக்கிறோம். அது னியாயந்நானே.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2025 பிப்ரவரி மாதம் அவை நிகழ்வுகள் – 2025 மார்ச் மாதம் வெளியீடு

### 01-02-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் – 200 : குருபிரான் அருளமுதம்:**
பிறரை குறை கூறும் மூடர்களின் குறை மனத்து பிழைகளை ஒதுக்கி, சாகாக்கலை எனும் பிரம்ம வித்தையை பழகச்செய்து சாவாவரம் அளிப்பவர்களே குருகுலாதிபர்கள். முத்திநெறி அறியாத மூர்க்கனாகிய நரனின் உள்ளத்தில் பத்திநெறியை பதிப்பித்து, மனுவாக மாற்றி, சித்த மலம் அறுத்து தேவனாக்கி வைக்கும் தெள்ளமுத ஊறலாகிய ஆசானின் னாதத்தில் இரண்டற கலந்து வாழும் வாழ்வே பேரின்ப பெருவாழ்வு.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - வெளிப்பாடு 4 : 4**
கர்த்தர் தன் சென்னெறிச் சீர் உழவு கோல் கொண்டு தன்னை நாடி வந்த மாணாக்கர் தலையில் மெய்யை ஏற்றும் சம்பவமே தீர்க்கதரிசனம். வைரமணித் தேகமாகிய வஜ்ரக்கல், அறிவு மாணிக்கமாகிய பதுமராகம், பச்சை மாமலை மேனியாகிய மரகதம் யாவும் கர்த்தரின் பொன்முடியில் சூடியிருக்கும் சூட்சும சரீரத்தின் சின்னங்களாகும்.

*ஜீவசகோதரி பானுமதி:* **அல் - குரான் : அத்தியாயம் - 24:** அல்லா தன்னை நாடியவர்களுக்கு அண்ட சராசரங்களின் படைப்பு இரகசியங்களை அறிவு விளக்கத்தின் மூலம் அகமியத்தில் பிரகாச ரூபமாக்கி வைக்கிறார்கள். இதன் பலனாக, இறைவன் வேறு நான் வேறு என்ற துவைத நிலையிலிருந்து மாறி, இறைவனும் நானும் ஒன்றே என்ற அத்வைத நிலையில் ஏறி இறைபொருளுடன் இரண்டறக் கலந்து சுகித்திருக்கிறார்கள்.

**பத்தியத்திடம்: குருபிரான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்களின் அருள் னாவினின்று **திட முறைப் பதம் உணர்தல்** என வெளியாகிய பத்தியத் திடத்தின் பாரப் பெரிய மெய்ச்செயல் யாதெனில், தன்னிலை கண்டு உணர்வதே. தன் எனும் ஜீவ குகைக்குள் நுழைந்து காலத்தை வென்று, பத்திய வரம்பில் சாதித்து பழம் புராதனராக வரும் குருனாதர், நெருப்பாறு எனும் மாய உலகின் மயக்கத்திலிருக்கும் மாந்தரை மீட்டு மயிர்ப்பாலத்தில் ஏற்றி எமனிடத்திலிருந்து பாதுகாக்கிறார்கள். கோடி சூர்யப் பிரகாசமாகிய னூரொளி எனும் ஆசானின் னாதத்தை கைப்பற்றி நடக்கும் பத்தியர்களே பண்ணுரு எனும் அறிவு வடிவாகி மெய்ஞ்ஞான நாளின் மகத்துவத்தை உணரும் வல்லபம் பெறுகிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*மந்திரவாதிகள், யோகிகள் என்று வேடம் போட்டுத் திரிகின்றவர்களை எவர் துச்சமாகக் கருதுகின்றாரோ அவரே பரமகுரு.*
***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

## 02-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பரிசுத்த ஆவித்தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரானின் அருளமுதம்:**
தன் இருதயத்தில் வீற்றிருக்கும் சிவனெனும் வாடாத தீபத்தின் மேல் வைக்கும் மாறாத மெய்யன்பே நம்மை சிவமாக்கும் என்பதையே **அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே** என திருமந்திரத்தில் அருளுகின்றார்கள். சூட்சுமமான வாழ்நாளின் இரகசியத்திற்கு காரணமான மனதின் புற வேகத்தினை அக வாழ்க்கையில் மாற்றி, தெளிவைப் பெற வழிகாட்டுபவர்களே ஆசான். நம் சொந்த தேகமான நாமத்திற்கான பொருளை அறியச் செய்து, ஆறாம் அறிவு ஈந்து அறியாமையான இருளை அகற்றி பிரகாச ரூபமாக மாற்றி நின்றதொரு பிரளயத்தின் அதிசயங்களை காணச் செய்து னித்திய வீட்டில் குடியேற்றி வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் நாகலிங்கம்:* அத்வைதம், துவைதம், விஷிஸ்டாத்வைதம் இதனை தன்னில் அறிவதற்காக மனிதனுக்கு பிரத்யேகமாக தரப்பெற்ற ஆறாவது அறிவை துலக்கி, புழுத்தலையனாக இருந்தவர்களை வைரத்தலையனாக மாற்றி வைப்பவர்களே குருபிரான்.

**குருபிரான் அருளமுதம் :**
மனிதனாகப் பிறந்து குருவின் கருணையினால் மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற்று பிறவிச்சுழலிலிருந்து தப்பித்து இக்கடத்துக்குள் இருக்கும் கடவுள் னிலையின் ரகசியத்தை அறிந்து அம்மயம் ஆக வேண்டும். வைணவத்தில் இறைவனின் நின்ற, கிடந்த, அமர்ந்த கோலத்தின் இரகசியத்தையும், சைவ மதத்தில் சிவபெருமானின் உருவம், அருவம், அருஉருவம் என்னும் உன்னத இரகசியத்தையும் ஓர் மெய்யான தேவகுருவின் கருணையால் தன்னுள் அறிந்து பிரம்மத்தை அறிந்த பிராமணன் ஆகலாம்.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* நமசிவாய எனும் மந்திரத்தில் மண் தத்துவத்தை குறிப்பது காஞ்சி. சுவை, ஊறு, ஒளி, ஓசை, னாற்றம் இவை ஐந்தின் வகையறிந்த உலகாக,மெய்யை போதிக்கும் போதனாச்சாரியராகத் திகழும் ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறிந்து, மதங்களின் அடினாதமான மோனனிலை, பிள்ளையார் சுழி இவற்றின் ரகசியத்தை அறிந்து, நமோவென்ற மோனசபா னிலையில் வாழ்வதே முக்தி தரும் திருத்தலங்களில் ஒன்றான காஞ்சியின் சிறப்பாகும்.

*ஜீவசகோதரர் கௌதம் :* யுகாந்த னாட்டு செம்மலாகிய ஆசான் அவர்களே அறிவெனும் மேல் நோக்குப் பாதையில் சீடனின் மனத்தை வழினடத்தி, அவரவர் சொந்த னாட்டில் குடியேற்றி அரசனாக வாழச் செய்கிறார்கள் எனும் பகிர்தலுடன் பரிசுத்த ஆவித்தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது.

## 06-02-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சிரந்நனியே உடல் வேறு பிரித்துப் பார்த்து...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனுவின் சிரசில் ஜீவமாணிக்கமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் அமானிதத்தின் சிவஞான சூட்சுமத்தை அருள்பவரே சிவபுரத்து அண்ணலாகிய மெய்ஆசான்.



Copyright © AMNA Trust, Chennai 

மூதூர் எனும் பண்டைப் புராதன வழியில் நம்மை கூட்டிச் சென்று, வேத வேதாந்தங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பை அறிவில் உதிக்கும்படி உணர்த்துகிறார்கள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் : 05** மனுவை ஈசனாக்கும் சக்தியுடைய அசலான விபூதியாக, வற்றாத ஜீவகங்கையாக, பஞ்ஞாட்சரப் பொருளாக அவரவர் தலைக்குள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மங்கா புதுமையுடைய கவசத் திருநீறை கங்காளன் திருக்கரத்தால் பூசிக்கொண்டவர்களே தேவர்கள்.

**பூரணப் புதையல்:** பரிபூரணமாக வரும் குருகொண்டலின் திருஆலவாய் நாதத்தினால் மூன்றாம் கண் திறப்பிக்கப்பெற்றவர்கள் காலத்தின் உன்னதம் அறிந்து வாழ்நாளை வீணாக்காமல் அறிவின்வழி சென்று பரமபதம் பெறுகின்றார்கள். வித்தில்லா வித்தாகிய மெய்ப்பால் பெற்றவர்கள், அதன் பலனாக, அண்ட பகிரண்டங்கள் அனைத்தும் இதயமாளிகையில் வீற்றிருப்பதை தன்னுள் உணர்ந்து ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக வாழும் பெரும் பாக்கியம் பெறுகிறார்கள். எதார்த்த உள்ளமுடைய மக்கள் யாவரும் குருஅருளால் இப்பெரும் பயனை அடைந்து அழியாப் பதத்தில் குடியேறி பிறவாநெறி பெறலாம் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 08-02-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்கள் அருளிய **தந்நருள வேண்டுமென்ற மைந்நர் தம்மை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* திரு ஆலவாயான் அருளும் அமுதமே அடி-முடி-நடுவாக ஆயிரத்தெண் மலரில் மந்திரவாசனாக வீற்றிருக்கும் அவரவர் நாமத்துக்குரிய பொருளை தரிசிக்க வைத்து ஜீவேசத்தகை வாழ்வில் குடியேற்றி வைக்கிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் - 201 : குருபிரான் அருளமுதம்:**
பேரறிவான குருபிரான் தன் வாய்மையால், நமது வாழ்நாள் வீணாகாமல் காக்கும் சன்மார்க்க செயலுக்கான ஆறாவது அறிவை அறியச் செய்கிறார்கள். காலன் சரணடையும் காலம் கடந்த எல்லையில் நம்மை பேரின்பம் அனுபவிக்கச் செய்கிறார்கள். ஐயறிவு இன்னதென அறிவிப்பதே ஆறாம் அறிவாகும். நினைவற்ற உறக்கம் எனும் எல்லையில் நினைவுடன் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் மெய்யறிவைப் பெற்றவர்களே ஊண் உறக்கம் அற்றவர் எனும் பதத்திற்கு உரியவர்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் - வெளியாக்கிய சுவிசேஷம்: 4, 5, 6, 7.** காலனை கலங்கச் செய்யும் இடி முழக்கமே ஆசானின் நாதம். அதுவே மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தின் ஜீவசிம்மாசனத்தில் நம்மை ஏற்றி வைக்கிறது. எழு சுடர் விளக்கின் தத்துவம், ஆசானின் வாக்குத் தீயாக வந்து நம் அறியாமையை சுட்டெரித்து அமானிதத்தை அறிய வைப்பதாகும். அகக்கண் கொண்ட நமது அந்தகரணக் கூட்டமே நான்முகன் ஆகும். கேசரியும் நந்தியும் கழுகும் இறைவனின் சாயலாகிய தொனியுமே நம்மை கைலாயத்தில் சேர்க்கும் வாகனமாகும். இதை யாவற்றையும் கங்குல் பகலற்ற காலமற்ற இடத்தில் வாழும் கர்த்தரின் தயவால் அறியலாம்.

**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**
நமது பாவத்தை முறித்து வட்டாக்கும் வள்ளலின் மனம் பூத்த திருமேனி மதி பூத்து ஒளிரும் நாவால் வழங்கும் அருட்செல்வம் அருந்தியவரே காமீல் பதம் பெற்றவர்கள். நம்மை மயக்கத்தில் ஆழ்த்தும் மனமே குருவின் பேரருளால் துப்புரவாக நமக்குள் துலக்கும் ஆசானெனும் அறிவாக மாறுகிறது. அடக்கம் மடக்கிப் பிடிக்கும் பிரம்மவித்தை செயலுள்ள திருப்பாடலே சாலை ஆண்டவர்கள் அருளிய தௌஹீது மக்காம். அடக்கம் மடக்கிப் பிடித்த



Copyright © AMNA Trust, Chennai

மதி பூத்த அனந்தர்களின் நாவில் கமழும் சந்தன கந்தமே நம் ஜீவனை அறிய வைக்கும் அமுதாகும். எதற்கும் முதற் பொருளான ஜோதிவடிவை குருவின் திருவருளால் அறிந்து அவர்களின் திருவாக்கின்படி நடப்பதே செல்வக்கரம் பிடித்து நடப்பதாகும். ஆசானின் வாக்காகிய சேம னிதியிலிருந்து விடுத்த விடு தீ யின் மூலம் நமது அறியாமை எனும் இருளாக இருந்த வீடு விடிந்ததை உணர்த்தும் நகல் சடங்கே புதுமனைக் குடியேற்றமாகும்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* அவரவரும் நன்மை கருதியே அபய அஸ்த முத்திரையுடன் விளங்கும் சிலா வடிவான வாலைத் தாயை அறவலம் செய்வர். அகமியத்தில் அறிவு ரூபமாக விளங்கும் ஆசானாகிய வாலைத் தாயை அறவலம் வரும் செயலே நித்திய நன்மையான ஜீவன் முக்தியை அருளும்.

பரிசுத்த ஆவித் தெய்வம் ஆதிசக்தி வாலைத்தாயின் திருப்பாதம் போற்றி வணங்கி ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 09-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப்பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஒன்றறிவதுவாக, உற்றறிவதுவாக, வாசனை, கேள்வி, இரு கண் வாயெவைக்கும் வல்லமையளிக்கும் மூன்றாவது கண்ணாக விளங்கும் அறிவென்னும் வாடாத தீபத்தை அகமுகமாக அவரவருள் கண்டு தெரிசிப்பதே விஸ்வரூப தரிசனையாகும். அறிவு அறியாமை கடந்து அவ் அறிவாக மாற்றி வைக்கும் தேவகுருவானவர்கள், நரனை மனுவாகிப் பின் தேவனாகுவதற்குரிய அறிவைப்புகட்டி, கழுத்துக்குக் கீழ் ஞானம் இல்லை என்பதை தெளிவாக்கி, பிடரிக்கண் திறந்து, தன் ஜீவனை தெரிசிக்க செய்வதற்காக அழியாத அறிவாகாரத்தை அருள் பாலிக்கின்றார்கள்.

**குருபிரான் அருளமுதம்:**

மெய்ஞ்ஞானமென்பது எதார்த்தமாக வாழ்ந்து பார்க்க வேண்டியதேயன்றி பார்த்தோ, கேட்டோ, உருப்போடுவதோ அல்ல. தன் மயமாக்கக்கூடிய சிவமயப்பொருளை, ஆறாவது அறிவாகிய அமானிதத்தை அறியாமல் **வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** எனும் சத்திய வேதத்தின் சுவிசேஷ நற்செய்தியை செயலாக்கவே ஆதி மார்க்க னீதி அவை நிர்மாணிக்கப் பெற்றுள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனிதன் சாகப் பிறந்தவன் அல்ல. மாறாத ஒன்றே மெய்யாக, அறிவாக, நாமத்துக்குரிய பொருளாக இறைவனாக உள்ளது. பிரம்மவித்தை செயலாகிய பிராணனை கண்டு தெரிசிக்கச் செய்யும் ஆசானிடத்தில் மாறா பற்று கொண்டு பத்திய ஒழுக்கத்தோடு இருந்து வர மரணமிலாப் பெருவாழ்வு கைவரவாகும். தன்னையறிந்த பெரியோர்களின் சிவானுபவம் மிகுந்த வார்த்தைகளைக் கேட்டுச் செயல்படுவதே ஞானமடைவதற்கான எளிய வழியாகும். அறிவிருக்கும் தலமறிந்து ஆவி வீணே போகாமல் காத்து, பிறவாப்பேறு அடைய ஆதி மார்க்க னீதி அவையில் சேர்ந்து ஆகிக்கொள்ள வேண்டும் எனும் பகிர்தலுடன், ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*ஸ்ரீ குருவைப் போன்ற தெய்வம், ஸ்ரீ குருவைப் போன்ற தந்நை, ஸ்ரீ குருவைத் தியானிக்கின்றதைப் போன்ற கருமம் பூமியின்கண் இல்லை. இல்லவே இல்லை.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 15-02-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
தன்னையறியும் தவமுறையின் மூலம் தலைவனாகிய இறைவனை அடைவதற்காகவே சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம், லைலத்துல் கதிர் ரா என்ற விசேஷ நாட்களானது பெரியோர்களால் உண்டாக்கப் பெற்றுள்ளது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 202:** துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்ய வந்த செம்மல்களாகிய குருபெருமானின் திருவுளப்பாங்கிற்கு இசைந்திருப்பவர்கள் தங்களின் குற்றங்கள் அனைத்தும் நீக்கப் பெற்று, தெளிந்த அறிவுடைய ஒழுக்க சீலனாகி தவவிரத வாழ்வில் குடியேறி வாழ்கிறார்கள்.
**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**
தன்னிலை கண்டு உணர்வதே பத்தியத் திடத்தின் சாராம்ஸம். மஹமூதராகிய குருபெருமானின் திருவடியில் பத்திய ஒழுக்கத்துடன் வாழும் மக்களே தேசு நிறமாகிய அக்னிச் சுடரின் பிரகாசத்தை அறிந்து, பங்கமில்லா துயர்ந்த தங்கமாகத் திகழ்ந்து குன்றாத பெருவாழ்வு வாழ்கிறார்கள். காலச் சக்கரத்தின் இரகசியத்தை கைக் கொண்டு வரும் பெரியோர்களின் வல்லபத்தை தன் பெருவெளியாகிய சாலையில் குடியேறிய உத்தமர்களால் உணர முடியுமேயன்றி மத்திமர்களால் காண முடியாது என்ற அருளுரையுடன் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 16-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சாங்குகோள் கடந்த ஞானிக டமக்கும்...** என்னும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

*ஜீவசகோதரி ஆர்த்தி:* நல்லோர்கள் நல்கும் நலம் தரும் சொல்வாக்கே நிர்க்குணமான பெரியோர்களின் அடையாளம். **சொல்லக்கேள் ஞானவழி சுருக்க மின்னூல்.** ஆசானின் வாக்கிற்கு செவி சாய்ப்பதே நல்வாழ்வு தரும்.

*ஜீவசகோதரி கனகத்தாய்:* **ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே** எனும் பாடலின் படி, சிவபதமான கைலாயத்திற்குச் செல்ல இறைவனால் நமக்கு தனிச்சீதனமாக அருளப்பெற்றுள்ள வாகனம் மனம். ஆசான் தனது நாதத்தினால் பிரம்மவித்தை செயலை பழக்கி மருவிலாக் குகன் வீற்றிருக்கும் மாசற்ற பேரின்பம் அளிக்கும் ஜீவக்குகையில் நம்மை குடியேற்றி வாழ வைக்கிறார்கள். மனதற்ற பரிசுத்த நிலையாகிய பெருமாள்தல் எனும் நிலையில் ஆறுமுகமான பொருளை அறிய வைக்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சோலையப்பன்:* சகல உயிரினங்களின் நிலைப்பாடு துக்க நிவர்த்தி; சுக பிராப்தி. ஐம்புலன் கொண்டு அனுபவிப்பது சிற்றின்பம். ஆனால் நித்திய சுகம் என்பது ஆசானின் நிறை நாதத்தை நம் செவியில் சுவைப்பதாகவும், ஓயாது படிக்க ஓங்கும் உணர்வாகவும், சொல்லக விளக்கது சோதியாகவும், அவர்களின் திருநா நடனம் ஓசையாகவும், மெய் மணமாகவும் அறிவை ஈந்தருளும் பேரின்பமாக இருக்கின்றது.

*ஜீவசகோதரி லோகநாயகி யுவராஜ்:* அறியாமையால் நான் என்ற அகங்காரம் கொண்டு ஐயறிவு நுகர்ச்சியிலே வாழும் நம்மை திருத்தி தவ நிறுத்தி ஆறாவது அறிவை இன்னது என வேத சாட்சியாக, தேவப்பதத்தில் ஆக்கி வைக்கும் ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி விமலா ரஜேந்திரன்:* மனிதன் தனிச் சீதனமாகிய அமானிதத்தை சுமந்து வந்தாலும் அதனை அறியாது வயது வாழ்நாளை விரயமாக்குகிறான். அதனை மாற்றி வைப்பதற்கான பிரம்மவித்தையை ஆசான் பழக்கி வைத்து செல்லுனாட் சென்றிடாது நம்மை ரட்சித்துக் காக்கின்றார்கள்.

*ஜீவசகோதரர் கார்த்தி:* பற்றின் காரணமாக அலையும் மனம், அறிவின் மீது வைக்கும் பற்றினால் அலைவற்று இருக்கின்றது. **பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு** என திருக்கொரலில் அருளப் பெற்றுள்ளது. அந்தரத்தில் சுற்றும் பூமி போலவும், புளியம் பழ ஓடு போலவும், மனித உடலில் உயிர் பற்றியும் பற்றாமலும் உள்ளது. மெய் ஆசான் அருளிய வழியில் விலகாமல் அவர்களின் நாதத்திற்கு செவிமடுத்தும், பாதம் பற்றியும் பிறவாமையைப் பெறலாம்.

*ஜீவசகோதரி செல்விமுருகன்:* நான் எனும் அகங்காரத்தின் ஆதிக்கத்தால் ஜீவன் கீழ்நோக்காக பாய்வதையே சத்தியவேதம் **மாமிச இச்சை மரணம்** என அருளுகின்றது. உடலில் உயிருள்ள போதே ஆசானின் நன்நாதத்தை தலையான செவிச்செல்வத்தில் உள்வாங்கி பரம் என்னும் மேலான நிலையை அடையலாம்.

*ஜீவசகோதரி விஜயசித்ரா:* சரவண நந்தவனத்தில் ஆதி சக்தி வாலைத்தாய் சன்னிதியானது, மனிதனை பிரகாசிக்கச் செய்கின்ற ஒளியாகிய நடுவான, அசலான காரணப்பொருளை உணர்ந்து சந்தித்து வந்தன வணக்கம் பழக, குருபிரான் ஆகம விதிப்படி ஸ்தாபித்த நகல் வடிவாகும். கருவூரார் அருளிய **ஆதி அந்தம் வாலையவள் இருந்த வீடே** எனும் பாடலுக்கேற்ப மகா வல்லப வஸ்துவாகிய ஈசானியப் பொருளை மனிதன் அறிந்துணர ஆமனுவே ஈசனாக ரூபம் தாங்கி வந்து தேஜோமயமான தெய்வமணிப் பீடத்தில் ஆதியும் அந்தமுமான வேதத்தாயாக, கன்னிமரியமாக, கன்னியாகுமரியாக பத்து வயது கன்னியாக வீற்றிருக்கிறார்கள். வாலகுருவாகிய ஆதி நாயகமானவர்கள் ஒரு மொழிக் கீதையினால் கன்னி நின்ற இடத்தை காட்டித் தந்து, பிறப்பு இறப்பின் ரகசியங்களை மெய் வணக்கத்தின் மூலம் பழக்கி ஜீவன் வீணாகாமல் காத்து மரணமிலாப் பெருவாழ்வை அடைய வழி அருள்கிறார்கள். இங்கனம் போதிக்க வந்த வாலைத்தாயாகிய வாலகுரு இருக்கும் அவ் இடமே சரவண நந்தவனம் என்னும் பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 20-02-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **பரமனே உருவெடுத்து பாரிடைக் குருவாய் வந்த...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே தொடங்கியது.

**குருபெருமான் அருளமுதம்:**

தன் தன்னுள்ளிருந்து செயலாற்றும் கர்த்தாவாகிய பரமனாகிய, பார்ப்பானை தன்னுள் அறிவதே தன்னை அறிதலாகும். இதனையே வள்ளலார் **கடவுள் நிலையறிந்து அம்மயமாகுதல்** என அருளியுள்ளார்கள். அதிசயம் இன்னதென்று அறிவிக்கும் அழியாப் பொருளை அறிவதே மனுவின் கடமையாகும். இதனை **தன்னை அறிதலே இன்னில வாழ்வு**, **தன்னை அறியும் அறிவே தகும் அறிவு** எனப் பெரியோர்கள் அருளியுள்ளார்கள். ஊனுக்குள் ஒளிந்திருக்கும் ஈசனை, மெய்ஆசான் துணையின்றி தானாக அறியமுடியாது. நித்தம் புதியவனான இறைவனை காண்பதே பழமை புதுமை தரிசனையாகும். அக இருளை மாற்றி, கோடி சூர்யபிரகாசப் பொருளை தன்னுள் கண்டு தரிசிக்கும் உயர்படிப்பை உயிர்ப் பிடிப்பாய் வழங்குவதே ஆதி மார்க்க நீதி அவை.

**திருமெய்ஞ்ஞான கொரல் திருவாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி :** என்றும் மங்காத கங்காளன் பூசும் திருநீற்றை குகனுடைய செயலால் பெற்ற ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள், என் வாய்மைக்குள் ஆகி **என் நூல்** என்னும் ஜீவனை பதனம் பண்ணும் செயலைப் பழகி சிவானுபவமாக்கி அறிவு சம்மதிக்க அகத்தில் காண்பதே மெய்வழி.



Copyright © AMNA Trust, Chennai March 2025

**பத்தியத்திடம் - குருபிரான் அருளமுதம்:**

நம்மிடமிருக்கும் மூலப்பழம் பண்ணாரமணியை அறிவித்து உணர்த்துவது, வித்தில்லா வித்தாகிய னாதமே. பிரம்ம தத்துவத்தின் இரகசியத்தை, மலர்ந்து மணம் வீசும் பூவைப் போல் மாறா மெய்மணத்தை பிரணவக்கலையை பதிப்பிக்கும் குருவே கண்ட ஒலிமலையாகத் திகழ்பவர். கண்டமாகிய காலத்தை கடக்கும் செயலே பிரம்மவித்தை. ஜீவனின் இரகசியத்தையே நம் ஆண்டவர்கள் **கண்டம் என்பார் மென்மிடர் என்பார்...** எனப் பதினாறு விதமாக அருள்கிறார்கள். கங்குல் பகலற்ற இடத்தில் வாழும் கண்டம் கடந்த செயலினை, நெற்றிப் புருவத்திடையெனும் இதயத்தில் பழகி மேல்நோக்காக இழுத்து வருவதே பிரம்மவித்தை செயல். பரம இரகசிய னாதமாகிய சிவராஜபாட்டையை அருளும் காமீல் பதமாகிய சுத்தத் திருவடியைப் பற்றித் தொழுதிட அதுவே மயிர்ப் பாலத்தை கடத்தும் உயிர்த்துணையாக நின்று விளங்கும். **சும்மா இரு சொல்லற** என்பது அருணகிரி நாதர் வாக்கு. எமனை சாந்திபடுத்தி, மும்மலத்தை வென்று, பிடரி மார்க்கத்தை அருள்வது இப்பூமண்டலத்தில் ஆதி மார்க்க னீதி அவையே என்னும் புரிதலுடன் பரிசுத்த ஆவியின் ஆசீர்பாதத்துடன் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-02-2025 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **தத்துவம் கடந்த தயானிதிக் கடலே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

உலகையும், உயிர்களையும் இயக்கும் பஞ்ச பூத தத்துவங்களையும் கடந்த பொருளாக அவரவர் உள்ளிருந்து இயக்கிக் கொண்டிருக்கும் கையே இயற்கை உண்மை கடவுள். அறியாமையான இருளை விலக்கி, புனற்றுறைக் கோயிலான இதயாசனத்தில் சிவன் என்னும் வாடாத தீபமாக வீற்றிருக்கும் இறைபொருளை, செவிச்செல்வமாக வழங்கி இறைனிறை ரகசியமான எவருக்கும் கலங்காத எமனைக் கலங்க வைக்கும் சாகாக் கலையைப் பழக்கி வைப்பவரே கல்கி.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 203:** ஆசானின் மெய்மண னாதமே தன்னறிவில் சாய்ந்த மக்களின் அறிவறியா தரித்திரத்தைப் போக்கி அறிவில் மெய்ப்பூப்பு உண்டாக்கச் செய்கிறது. வேத சாட்சியாக எதார்த்த மனப்பக்குவம் கொண்டு வேத சாட்சியாக பழகும் நன்மக்களுக்கே மெய் வாய்க்கும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் : வெளிப்படுத்தின சுவிசேஷம் - 4 : 8, 11.** முத்தொழில், மூன்றுலகு, முக்காலங்களையும் அறிந்துணர்ந்து சர்வவல்லமை பெற்று வரும் கர்த்தராகிய குருபிரானே அழிவிலா னித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தையும் கையில் வரவழைத்துத் தரும் கருணாமூர்த்தி ஆவார்கள். பரம ரகசியமான கங்குல் பகலற்ற இடத்தில் ஒடுங்கும் மனதற்ற பரிசுத்த அறிவின் னிலையே ஏழாவது நாளான ஓய்வு நாளாகும். அந்தகரணங்களின் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவே பார்வை, கேள்வி, சுவை, நுகர்வு ஆகிய புறக்கரணங்களிலிருந்து சர்வத்தையும் ஊடுருவிப் பார்க்கும் நான்முகனாக உள்ளார்.

**பத்தியத் திடம் - குருபிரான் அருளமுதம்:**

குருவின் அருளால், அலையும் மனம் அசைவற்று திடம் கொள்ளச் செய்யும் பதமே பத்தியத் திடமாகும். பெரியோர்கள் வேத வேதாந்தங்கள் மூலம் வேத முடிவான ஏகாட்சரப் பொருளை அடைவதற்கான வழியை அருள்கிறார்கள். எமன் ஆக்கினை இல்லாத இராப்பகலில்லா பொன்னாட்டிற்கு முப்பால் கடந்து சென்று வரும் பிரம்ம வித்தைச் செயலே மலகூத்தாகும். பாசுனபி என்பது மெய்ப் பொருளாகவும், விளக்கின் ரகசியமாகவும், தன்மயமாக்கும் சுத்தம் பொருந்திய நெருப்பின் ரகசியமாகவும் உள்ளது. நாதம் விளைந்து நாத லட்சணத்தைக் கைக்கொண்டு போத லட்சணம் மூலம் வேத லட்சணத்தை அருளும் தன்னை



Copyright © AMNA Trust, Chennai 

அறிந்தவர்களே, வாசி இரண்டும் கூடும் இடமான மக்காமிடத்தில் செம் பொருளான அறிவு மாணிக்கப் பொருளை அறிய வைக்க முடியும். அத்தகைய மெய்க்குருவின் திருவருளால் ஜலத்தினில் அக்கினி உருவாய் விளங்கும் இறை திருவடியை ஒழுக்கத்துடன் பற்றித் தொழுது, கீழ் நோக்கான மனத்தை மேல்நோக்காக மாற்றி சிபத்தான அறிவின் துணையுடன் ஆதி மார்க்கமான னீதி மார்க்கத்தில் நாம் சேர்ந்து ஆகிக் கொள்வோம் எனும் குருபிரான் அருளுரையுடன் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவு பெற்றது.

## 23-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மனிதன் தன் உள்ளமாகிய மகா மக சூக்கான இருதயத்தை பிரகாசமாகக் கண்டு வணங்குவதற்கு, பரிசுத்த ஆவி, தெய்வப்பதம், சாலை என்னும் தெய்வ எல்லைகளை நம் அகமியத்தில் காட்டி ஜென்ம சாபல்யம் பெற வைப்பது ஆசானின் திருநடனம் ஒன்றே. ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழி காட்டி உய்வழி கூட்டும் மெய்வழியை தரிசிக்க வைப்பதும் அவ் வாய்மையே. தூண்டா மணியாகவும் தீண்டாத் திலதமாகவும் நம்மிடம் உள்ள சாலை என்ற மெய் மேனியை, அஃகண் மூலம் தரிசிக்கச் செய்யும் ஆசானின் ஒரு மொழியே நம்மை எமன் கைவசப் படாமல் மீட்டு நித்திய வாழ்வு பெறச் செய்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஜடப் பொருளாகிய நம் உடலை இயக்குகின்ற உடல் கடந்து நிற்கும் உறுபொருளை விவரிக்கின்ற பொக்கிஷமே ஆண்டவர்களால் அருளப் பெற்றுள்ள ஆதி மெய் உதய பூரண வேதாந்தம். அதன் பூட்டைத் திறக்கும் சாவியை திருக்கரத்தில் கொண்டுள்ள தன்னை அறிந்த பெரியோர்கள் எண்ணி இரங்கும் போதே ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவாகிய உபதேசத்தை அறிந்து கொள்ள முடியும். **நான் தான் நீ, நீ தான் நாம்** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி எதற்கும் முதற்பொருளாக இருக்கும் ஆன்மா பரத்துடன் கலந்த நிலையே நாம். ஏதுமிலதாய் யாதுமுளதாய் இருக்கக் கூடிய பரமாகிய சிவமாகிய ஜீவனாகிய சூன்ய சக்தியாகிய **நீ** எனும் ஒன்றை அறிவதுவே மனுவின் கட்டாயக் கடமையாக உள்ளது. வயிற்றுப் பசியை குறிவைத்து இயங்குவது புற உலகம். அறிவுப்பசியை குறிவைத்து இயங்குவது அக உலகம். அறிவுப் பசி தீர்ந்திட அறிவாகாரம் அருளும் ஆசானின் அன்பகத்தில் ஆகி அறியாமை அகலும் போதே அன்னம் மயில் வாசி என்ற குதிரை ஏறி அகிலம் அண்டம் அரை நொடியில் வரவாகும். இவ்வாறான செயல் நிறைவேறும் இடமே இன்று ஆதி மார்க்க னீதி அவையாகத் திகழ்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 23-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்தமனத் தனியோகர் உளத்திற் பூக்கும்...** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

*குழந்தை டியானா:* அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருப்பது பேதமை அஞ்சி விலகுவது அறிவுடைமை. மெய்க் குருவின் துணையுடன் எண்ணம் சொல் செயலினால் நன்மை செய்து கற்கும் கல்வியே மனதின் அச்சத்தினை தவிர்க்கும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி சுமதி:* தொல்காப்பியர் அருளியவாறு 6ம் அறிவான மனம் ஐம்புலனுடன் இயங்காமல் மெய்ஆசானின் அருளால் அலைவுறாமல், வைராக்கியமுடன் ஏழ்நிலை கம்பத்தில் கட்ட சுவாசம் ஒடுங்கும். இதனை பிரம்மவித்தையாக, பரமபத செயலாக, கர்த்தருக்குள் ஒடுக்கம் என்பதாக, ஹயாத்துல் கைபு எனவும் சாவருமுன் சாப்பழகும் சன்மார்க்க செயலாகவும், அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதாகவும் பெரியோர்கள் அருளியுள்ளனர்.

*ஜீவசகோதரி சருபா:* அறிவாக, சொரூபமாக, திருச்சிற்றம்பலப் பொருளாக மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் உள்ள இறைவனை குருவின் தயவால் அறியலாம். சொந்த ஒலிவீடாக பிடரியாக அவரவர் நாமத்தின் பொருளாக னீதியாக சுழிணையாக அது உள்ளது. புலன் வழி ஓடும் மனதை லயப்படுத்தி சாமுன் சாகப்பழகும் பிரம்மவித்தை செயலை குருவின் துணையுடன் பழகி வர அழியாத திருப்புகழை அடையலாம். குருபிரான் தன் நாத ஒலியினால் நம் சித்தத்தில் விளக்கேற்றியதும் இறை இல்லத்தில் நாம் குடியேறி வாழலாம். ஆசானின் னாதமாகிய இளநீரைப் பருகி சிற்றின்பம் நீக்கி ஐவழி விளைவிற்கு அப்பால் சென்று பற்றற்ற பேரின்பம் அடைந்து தாமரை இலை நீர் போல் வாழப்பழக வேண்டும்.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* குருபிரானின் இரக்கமும் அன்பும் நாம் நிச்சயம் பெற வேண்டும். நின்றோர்கள் நிலையறிந்து கொடுக்கும் வள்ளலாம் குரு அருளிய பத்தியத்தின்படி பழகும் போது வேத வேதாந்த ரகசியங்கள் கைவரவாகும். அது கற்பனை கடந்த சஞ்சீவியாக, தீர்க்க தரிசனையாக, தெளிந்த அறிவாக, இறை பொருளாக, மேல் நோக்கமாக, மரண பயத்தை மாற்றிக் வைக்கும் பிரம்மவித்தை செயலாக உள்ளது. அவர்கள் அருளே மங்களமாக நற்செயலாக சேமிப்பாக உள்ளது.

*ஜீவசகோதரி செஜிதா:* அண்டராகிய தேவராலும் அறிய முடியாத திரு எனும் திருவடி என்பது மனமற்ற இமையா நாடாக ஆதி புள்ளியாக உள்ளது. சிவராஜ பாட்டையில் வழி கூடி நடக்கும் தொண்டர்களின் இதயத்தில் உறைபவரே தனிகையராகிய இறைவன். வினைகொண்டு படைக்கப்பட்ட தேகம் உருவத்தால் பலவானாலும் உள்ளிருக்கும் ஜீவன் ஒன்றே. மனு ஒருவனுக்கே அதோகதியை நல்ல கதியாக மாற்றக்கூடிய சக்தி உண்டு. சக்தியாக மாயையாக உள்ள நம் மனம் ஆசான் அருளால் அகம் நோக்கினால் சிவனாக அறிவாக மாறுகிறது.

*ஜீவசகோதரர் ரிஷி:* குருவின் அன்பெனும் விசேஷத்தால், நரன் மனுவாகி தேவனாகி தெய்வமாகி இறைவன் குறித்த இலக்கை அடைகிறான். குருபெருமான் தயவின் மூலம் உபதேச செயல் பழகி, உணர்ந்து, மனம் அலையாமல் ஐம்புலனை கவனம் எனும் இறைபொருளால் அடைத்து, எதார்த்தமாக வாழ்ந்தால் அறிவு துலங்கி இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக வாழலாம்.

*ஜீவசகோதரர் கோபாலகிருஷ்ணன்:* விதியும் மதியும் மனிதனுக்கே. விதியாகிய சாவை விட்டு மதியாகிய ஆசானின் துணை கொண்டால் கரையாகிய எமபடரை வென்று மோட்சம் அடையலாம். நமது நவக்கிரகங்களை சங்காரம் செய்து அணுக்கிரகித்து பாவ இருட்டை உலர்த்தி இதய ஆசனத்தில் சிவன் என்னும் வாடாத தீபத்தை ஏற்றி வைப்பவர்களே குரு. அவரே சிவனாக ஜீவனாக அறிவாக உள்ளார்.

*ஜீவசகோதரி கோமதி:* இறைவனிடம் அமானிதம் என்னும் தனிச்சீதனம் பெற்று வந்த மனிதன் தன்னுலகை அறியாமல் அழிகின்றான். நமது வீணாகும் வாழ்நாளை குருவின் இரக்கத்தால் அறிந்து இருதயத்தில் உள்ள ஈசனை அறியலாம். குரு சொன்ன ஆசனமிட்டு நாள்தோறும் தாரகா மந்திரத்தை ஓதுவதால் போன நாள் மீண்டு நாம் நித்திய சுகம் பெறலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* முக்காலம், மூன்று வினைகள் கடந்து ஆசீர்பாத எல்லையில் இருந்து அருளும் குருவின் மூலமே நாம் கோடி சூர்யப் பிரகாசத்தை அறிய முடியும். பெரியவர்களின் திருவாக்காகிய தீயே அழியாத திருநீறாகும். குருவின் தயவே நம்மை அழியாப் பொருள் மீது மாறாத அன்பு வைக்கச் செய்யும் எனும் பகிர்தலுடன் ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திர பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai March 2025

## 27-02-2025 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **தரங்நு புராதன...** எனும் பூரண புதையல் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* வில்லோசையாக வரும் மெய்க் குருபிரானின் நாத தொனியானது, வல்லபமான கலைகள் திரண்டு வரும் பெருங்கிரணமாக, அறியாமை அகற்றும் பாஞ்சசன்ய சங்காக உள்ளது. அவரவர் அகத்தில் நற்றாளாக விளங்கும் ஆறாம் அறிவே துப்புரவாகத் துலக்கும் ஆசனாக ஜீவனெனும் சிற்றம்பலப் பொருளாக இருப்பதை குருபிரான், நம் மனம் அலையாத அறச்செயல் அருளி அறியச் செய்கிறார்கள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் 6ன் தொடர்ச்சி:** நகலாக அணியும் உருத்திராட்சம் எனும் கொட்டைகாயைக் கண்டு அஞ்சாத எமனை அசலான செயலுள்ள உருத்திராட்சத்தை மெய்க்குருவின் அருளால் பெற்று வெல்லலாம். உகாரம் என்னும் ஊமை மூலத்தில் அடங்குவது உபாயம் ஆகும். அகத்துக் கண்ணனை அறிந்து அன்பு கொண்டிடில் ஜகத்து எமபடரை தாண்டி வாழலாம். காலமற்ற இடத்தில் குடியேறி காலத்தின் அதிபதியான காலனின் பயம் கடந்து வாழும் வாழ்வே பிரம்மவித்தை செயலாக அறமாக உள்ளது.

**சிவராத்திரி சிறப்புகள்:** உலகில் பல கோடி மக்கள் கூடி கொண்டாடும் சிவராத்திரி எனும் சடங்குகள் யாவும் அறிவை வீணடிக்கும் செயலாகவே உள்ளது. தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் என திருமூலரும், **ஜீவனே நீயாகும் அறிவும் நீயாம் சிவன் தானே நீயாகும் பரமும் நீயாம்** என சிவானந்த போதத்திலும் அருளப் பெற்றுள்ளது. சிவன் எனும் அறிவானது ரா எனும் பிரகாசமாக ரவி-மதி-சுடர் எனும் முச்சுடராக இருப்பதை அறிகின்ற நாளே சிவராத்திரி. மனிதனின் அகமியத்தில் ஆவிப் பொருளாக விளங்கும் நான்கு தேக ரகசியத்தை சுத்த சைதன்ய நாதர் சொல்லொரு பொருள் கொண்டு அழிந்திடா சூக்குமத்துள் அடங்கிப் பார்த்தே அறிய முடியும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மனித உடலின் தத்துவமே சிவலிங்க வடிவாக முப்பொருள் கோல விளக்கமாக உள்ளது. மனிதனின் மூன்று குணங்களும் அதன் உற்பத்தி ஸ்தானத்தில் நிலைத்திருக்கும் செயலே சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, லைலத்துல் கதிர் ரா , எட்டாம் நாள் ரா ஞானஸ்னானம் என்பதாகும்.

*பத்தியத்திடம் புரிதல்கள்:* பத்தியம் என்பது மெய்குருபிரான் சொல்லும் உளவின் படி தன் எனும் ஜீவ குகையில் திடமாக பழகி வரும் செயலாகும். பார்ப்பவன், பார்க்கும் கருவி, பார்க்கப்படும் பொருள் என மூன்று நிலைகளாக இருப்பதை மெய் மகத்துக்களின் துணை கொண்டு நம்மிடம் அறியும்போது ஓம் எனும் ஊமை மூலத்தில் நாம் ஐக்கியமாகலாம். ஈசனாக வரும் ஆசானை அறிவதே பிரம்ம வித்தையாகும் என்ற பகிர்தலுடன் ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

*குரு மூலம் சுவரூப ஞானம் அடையாதவன் செய்யும் தவம் ஜெபம் முதலியன யாவும் சிறுபிள்ளைகளின் விளையாட்டும் அறிவற்ற பிதற்றலும்போல் வியர்த்தமேயாம்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**02-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **ஆனந்தக் களிப்பு** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. பின் எல்லோருக்கும் **செயலுடைச் சமரசம்** பாடல் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது. தொடர்ந்து அடுத்த வாரமும் மேற்படி பாடலுக்கான பயிற்சி தரப் பெற்றது.

**16-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய **நம்பிய தன்னுயிர்...** எனும் ஞான முறையீடு ஸ்தோத்திரப் பாடலை தொடர்ந்து **சேவடிச் சேகரம்** பாடல் பாட பயிற்சி தரப் பெற்று, அனைவரும் அழகிய இனிய குரலில் பாடியவுடன் அவை இனிதே நிறைவானது.

**23-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

ஆதி மான்மியத்தில் முதுமொழி உதய பருவத்திலிருந்து **ஜகத சற்குணா லங்ஙிர்த சன்னதர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது. மேலும் **சன்னதம் பெறு பருவம்** பகுதியிலிருந்து **இந்திர கிரண ஒளியில் இளனீல மோடும்...** எனத் தொடங்கும் மனப்பாடப் பகுதி பயிற்சி அளிக்கப் பெற்றதுடன் அவை இனிதே நிறைவடைந்தது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*அழிவில்லாத ஈசுவர ரூபத்தைக் குரு ஒருவரே அறிவார். அவருடைய பிரசாதத்தினாற்றான் அந்த சுவரூப ஞானம் உண்டாகின்றது. அவ்வாறின்றிக் கோடிக்கணக்கான சாஸ்திரங்களைக் கற்பதினால் அது உண்டாகாது.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## பிப்ரவரி 2025 மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 02-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் **திரு.சாலை ரவி அப்பா** அவர்கள் காஞ்சிபுரத்தில் எழுந்தருளி ஞான தேட்டமுள்ள நன்மன மக்களைச் சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.







### 09-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருமுன்பாக, காலை சுப வேளையில் ஜீவதம்பதியர் பழனிவேல்-பத்மாபதி புதல்வர் **கோபினாத்-காயத்ரி** தம்பதியரின் புதுமனைக் குடியேற்றம் நடைபெற்றது.



Copyright © AMNA Trust, Chennai 

**13-02-2025 ~ வியாழக்கிழமை**

குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திரு முன்னிலையில் ஜீவதம்பதியர் நாகராஜ் - பிந்து (சென்னை) இவர்களின் மகள் **ஸோபியா - வில்பிரட்** ஆஸ்பார்ன் திருமண வரவேற்பு சென்னையில் நடைபெற்றது.



**16-02-2025 ~ ஞாயிற்றுக்கிழமை**

காலை சுப வேளையில் குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திரு முன்பாக ஜீவதம்பதியர் வெங்கட்ராமன்-பாரதி அவர்களின் புதல்வர் அஜய்கிருஷ்ணன்-சஹானா தம்பதியரின் புதுமனைக் குடியேற்றம் நடைபெற்றது.

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **25-04-2025 / வேலூர் வெள்ளிக்கிழமை** | குருபிரான் **திரு. சாலை ரவி அப்பா** திருமுன்பாக, ஜீவபிறவியர் சரவணன் - சங்கவி இவர்களது திருமணம் காலை 6.00 - 7.25 சுபவேளையில் வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, லத்தேரி, அன்னங்குடியில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2025 பிப்ரவரி மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 70**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 44 – Month: March 2025*